தினமணி

**நன்செய், புன்செய் நிலங்களுக்கு தீர்வை குறைப்பு**

First Published : 06 May 2010 01:44:59 AM IST

கிருஷ்ணகிரி, மே 5: தமிழக அரசால் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களுக்கு தீர்வைத் தொகை குறைக்கப்பட்டுள்ளது என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் புதன்கிழமை தெரிவித்தார்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஜமாபந்தி புதன்கிழமை தொடங்கியது.
கிருஷ்ணகிரியில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்திக்கு ஆட்சியர் தலைமை தாங்கினார்.
இதில் பென்னேஸ்வரம், தளி அள்ளி, மோட்டூர், மாரிச்செட்டி அள்ளி, பாலேகுளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பட்டா மாறுதல், வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை உள்ளிட்ட கோரிக்கை மனுக்களை அளித்தனர்.
பெறப்பட்ட 243 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்ட அவர் தகுதி வாய்ந்த நபர்களுக்கு மாலைக்குள் முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவு வழங்குமாறும், பட்டா மாறுதல் உத்தரவை வரும் 11-ம் தேதிக்குள் வழங்குமாறும்
அவர் உத்தரவிட்டார்.
1419-ம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாய கணக்குகளை ஆய்வு செய்த அவர், தமிழக அரசு ஒரு ஏக்கர் நன்செய் நிலத்திற்கு ரூ.60-லிருந்து ரூ.5-ம், புன்செய் நிலத்திற்கு ரூ.14-லிருந்து ரூ.2-ஆகவும் தீர்வையை குறைத்துள்ளது. தலவரி, தலமேல்வரி, நீர்க்கூலி ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
இதனால் அணையிலிருந்து பாசனத்திற்கு திறந்துவிடும் தண்ணீரை பயன்படுத்தும் விவசாயிகள் அதற்கான தொகையை செலுத்தாமல் இலவசமாக தண்ணீரை பயன்படுத்திக் கொள்ளளாம் என்று ஆட்சியர் தெரிவித்தார்.
இக்கூட்டத்தில் 9 பேருக்கு தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ.45 ஆயிரம் மதிப்பிலான வீட்டுமனைப் பட்டா மற்றும் 5 பேருக்கு தலா ரூ.48 ஆயிரம் வீதம் ரூ.2.40 லட்சம் மதிப்பிலான முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டது.

**சந்தவாசலில் நாளை விவசாயிகளுக்கு கருத்தரங்கு**

First Published : 06 May 2010 01:49:46 AM IST

ஆரணி, மே 5: பாரத ஸ்டேட் வங்கி சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு சந்தவாசல் பி.ஆர்.எஸ். மஹாலில் வெள்ளிக்கிழமை (மே 7) நடைபெறுகிறது.

இது குறித்து வங்கி கிளை மேலாளர் கே.எஸ்.கெப்ரிசங்கர் கூறியது: இக்கருத்தரங்கில் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செய்தல், செம்மை நெல் சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம், திசுவாழை சாகுபடி உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படும்.

மேலும் விவசாயிகளுக்கு இலவசமாக நுண்ணுயிர் உரங்கள், மாட்டுத் தீவனம், விதைகள், மரக்கன்றுகள் வழங்கப்படும். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி, சுழல்நிதி என ரூ.50 லட்சம் வழங்குதல் உள்ளிட்டவை நடைபெறும்.

சென்னை பாரத ஸ்டேட் வங்கி பொதுமேலாளர் வி.ஜி.கண்ணன், மும்பை பாரத ஸ்டேட் வங்கியின் மத்திய ஆட்சி மன்றக்குழு இயக்குநர் டாக்டர் டி.என்.பலோதி, மண்டல உதவி பொதுமேலாளர் வி.சம்பந்தன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர் என்றார்.

**விதையிலேயே கரைந்துபோகுது வங்கிக் கடன்: பரிதவிக்கும் மஞ்சள் விவசாயிகள்!**

First Published : 06 May 2010 03:23:41 AM IST



ஈரோடு, மே 5:வங்கிகளில் வாங்கும் கடன், விதை வாங்குவதற்குக் கூட போதுமானதாக இல்லாத நிலையில், பராமரிப்புச் செலவுக்கு கந்து வட்டிக்காரர்களிடம் கடன் வாங்கும் நிலைக்கு மஞ்சள் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். சாகுபடிச் செலவிற்குப் பணம் இல்லாமல் விவசாயிகள் சிரமப்படக் கூடாது என்பதற்காக, கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகள் மூலம் பயிர்க்கடன் அளிக்கப்படுகிறது. சாகுபடி செலவினை பொருத்து ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கடன் அளவு நிர்ணயம் செய்யப்படுகிறது.

வேளாண்மைத் துறை, வங்கி அதிகாரிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு ஒவ்வொரு ஆண்டும் கூடி, தங்கள் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் பயிர்களுக்கு, அடுத்த நிதியாண்டிற்கான பயிர்க்கடன் அளவு குறித்து முடிவு செய்து, இந்த முடிவுகளை மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பும்.

மாவட்ட குழு அளித்துள்ள பரிந்துரைகளை மாநிலக் குழு பரிசீலனை செய்து இறுதி முடிவினை நிதியாண்டு தொடக்கத்தில் அறிவிக்கும். இதன் அடிப்படையில் வங்கிகள், விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு கூட்டம் நடத்தப்படவில்லை. இந்த நிலையில் மாநில குழு பயிர்க்கடன் அளவை முந்தைய ஆண்டைவிட 10 சதவீதம் கூடுதாலக அறிவித்து வந்தது.  இதன் அடிப்படையிலேயே பயிர்க்கடன் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் விவசாய சங்கங்களின் தொடர் கோரிக்கையினை ஏற்று ஈரோடு உள்ளிட்ட ஒரு சில மாவட்டங்களில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பெறப்பட்ட பரிந்துரைகள் மாநிலக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில் பிரதான பயிரான மஞ்சளுக்கு ஏக்கருக்கு ரூ.90 ஆயிரம் பயிர்க் கடனாக வழங்க வேண்டும் என்று, மாவட்டக் குழு பரிந்துரை செய்திருந்தது.  அண்மையில் வெளியிடப்பட்ட மாநில குழுவின் இறுதி அறிவிப்பில் மஞ்சள் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் பயிர்க் கடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிரிட 800 முதல் 1000 கிலோ விதை தேவைப்படும். பவானிசாகர் அரசு விதைப் பண்ணையில், விதை மஞ்சள் விலை கிலோ ரூ.23, வெளிச் சந்தையில் கிலோ ரூ.36. வங்கிகளில் வழங்கப்படும் கடன் விதை வாங்கக் கூட போதுமானதாக இல்லை.

தங்களுடைய நிலத்தில் விளைந்த மஞ்சளை விதைக்குப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு இந்த கடன், சாகுபடி செலவிற்கு ஓரளவு பயனுள்ளதாக இருக்கலாம். ஆனால் வெளியில் விதை வாங்கி பயிரிடும் விவசாயிகளை பொருத்தவரை நிலத்தைத் தயார்படுத்தவதற்கு கூட வட்டிக்கு கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க செயலர் தளபதி கூறியது:

அனைத்து மாவட்ட பரிந்துரைகளையும் பெற்று, ஒவ்வொரு பயிருக்கும் எந்த மாவட்டத்திலிருந்து குறைவான பரிந்துரை வந்துள்ளதோ, அதனை மாநிலக்குழு இறுதி செய்கிறது. நீலகிரியில் விளையும் தேயிலைக்கான பயிர்க்கடன் அளவு ஈரோடு மாவட்ட குழு அளிக்கும் அடிப்படையில் இறுதி செய்யப்படுமா?
இதற்கு சாத்தியமில்லை எனில் ஈரோடு மாவட்டத்தின் பிரதான பயிரான மஞ்சளுக்கு, தஞ்சை மாவட்டக்குழு அளித்துள்ள பரிந்துரைப்படி பயிர்க்கடன் அளவு நிர்ணயிப்பதும் நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது.
மாநில அளவில் இறுதி செய்யப்படும் பயிர்க் கடனை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், இம்மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடிக்கு என்ன செலவாகும் என்பதை மாவட்ட நிர்வாகம், அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் வரும் ஆண்டுகளில் தன்னிச்சையான முடிவுகளை மாநில தொழில்நுட்பக் குழு எடுக்காது என்றார்.
இது குறித்து கூட்டுறவுத்துறை உயரதிகாரிகளிடம் கேட்டபோது, மாவட்ட அளவிலான தொழில்நுட்பக் குழு கூட்டம் நடத்தி பரிந்துரைகளை மாநிலக் குழுவிற்கு அனுப்புவது, மாநிலக்குழு இறுதி செய்த பின் மாநில தலைமை கூட்டுறவு வங்கி தெரிவிக்கும் உத்தரவின்படி பயிர்க்கடன் அளவு வழங்குவதை தவிர, பயிர்கடன் நிர்ணயப்பதில் வேறு எந்த பங்கும் தங்களுக்கு இல்லை என்றனர்.
மஞ்சள் பயிர் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.80 ஆயிரம் முதல் ரூ.90 ஆயிரம் செலவாகும். கூட்டுறவு வங்கிகளில் வட்டியில்லாமல் பயிர்க் கடன் வழங்கப்பட்டு வரும் சூழலில், கடன் அளவை அதிகரித்தால் குறு மற்றும் சிறு விவசாயிகள் பெருமளவில் மஞ்சள் பயிரிட வாய்ப்புள்ளது.
கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.15 ஆயிரம் வரை விற்பனையாகிறது. இதன் மூலம் கடனை எளிதில் திருப்பிச் செலுத்த வாய்ப்புள்ளது என்றனர் வேளாண்மைத்துறை அதிகாரிகள்.

**கரும்பில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 06 May 2010 09:47:33 AM IST

சங்ககிரி, மே 5: கரும்பு பயிரில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வழி முறைகள் குறித்து, சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் தெரிவித்துள்ளார்.
அவர் கூறியுள்ளது:
கரும்பு நட்ட 4 மாதங்களுக்கு மேல் அறுவடை வரை இடைக்கணுப்புழு தாக்க வாய்ப்புள்ளது. கரும்பின் இடைக்கணுப் பகுதியில் இப் புழுக்கள் துவாரங்கள் ஏற்படுத்துவதால் அதன் வழியாக கரும்பின் தசை சக்கைகள் வெளிவரும். பாதிக் கப்பட்ட கரும்பின் மேல் மற்றும் கீழ் உள்ள பருக்கள் முளைத்து வெடிக்க ஆரம்பிக்கும். பாதிப்பு அதிகமானால் கரும்பு காயத் தொடங்கி மகசூல் குறைந்து, சர்க்கரைச் சத்து பாதிக்கப்படும்.
இதைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான டிரைக்கோகிரம்மா கைலோனிஸ், ஏக்கருக்கு ஒரு சி.சி என்றளவில் நட்ட 4 மாதங்களில் தொடங்கி 15 நாட்கள் இடைவெளியில் குறைந்தது 6 முறை விட வேண்டும். மேலும் நட்ட 5-வது மாதம் காய்ந்த சருகுகளை உரிக்க வேண்டும். கரும்பு சாயாமல் விட்டம் கட்ட வேண்டும்.
வயலில் நீர் தங்கினால் வடிகால் வசதி செய்ய வேண்டும். கரும்பு இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண் ணிகள் பவானிசாகர் மற்றும் மோகனூர் கரும்பு ஒட்டுண்ணி நிலையங்களிலும், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் கிடைக்கும்.
இம் முறைகளைக் கடைப்பிடித்து இடைக்கணுப் புழுக்களைக் கட்டுப்படுத்தி விவசாயிகள் பலனடையலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அவசியம்: வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் வலியுறுத்தல்**

First Published : 06 May 2010 09:47:22 AM IST

கோவை, மே5: விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையைச் சமாளிக்க புதிய பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்ய வேண்டியது அவசியம் என்று வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.முருகேசபூபதி வலியுறுத்தினார்.

வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ள செம்மைநெல் சாகுபடிக்கான விசைக் களையெடுப்பான், வணிகப்படுத்தும் வகையில் பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த விசைக் களையெடுப் பானின் அறிமுக விழா வேளாண் பல்கலை.யில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியது:

வேளாண் பல்கலைக்கழகம் இதுவரை 746 பயிர் ரகங்களை வெளியிட்டுள்ளது. 146 பண்ணைக் கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. விவசாயப் பணிக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் அதிக செலவாகிறது. கரும்பு சாகுபடியில் உற்பத்திச் செலவில் 50 சதம் வெட்டுக்கூலிக்குச் சென்றுவிடுகிறது. இதுபோன்ற காரணங்களால் வேளாண் உற்பத்தி குறைந்து வருகிறது. ஆகவே, புதிய பண்ணைக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா கிறது.

நம் நாட்டில் பெரும்பகுதியினர் சிறு, குறு விவசாயிகள் என்பதால் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறிய அளவி லான பண்ணைக் கருவிகளை அறிமுகம் செய்ய வேண்டும்.

வேளாண் கருவிகளுக்காக விவசாயிகளுக்கு ரூ.55 கோடி மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் 15 சென்ட்}க்கு மேல் விவசாய நிலம் இருப்பதில்லை. இதனால் மொட்டை மாடியில் கூட அங்கு விவசாயம் செய்கின்றனர். இந்தியா வில் ஏராளமான விவசாய நிலம் இருக்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

"செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்கிறது. இருப்பினும் இதில் களை எடுப்பதில் சிரமம் உள்ளது. இது வரை கையால் இயக்கப்படும் கருவி பயன்படுத்தப்பட்டது. விவசாயிகளின் சிரமத்தைப் போக்கும் வகையில் விசைக் களையெடுப்பானை வேளாண் பல்கலை. கண்டுபிடித்துள்ளது.

இதை விவசாயிகளுக்கு கொண்டு செல்லும் வகையில் கருடா பவர் வீடர் என்ற பெயரில் களையெடுப்பான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ.31 ஆயிரம். மானிய விலையாக விவசாயிகளுக்கு ரூ.15 ஆயிரத்து 500}க்கு வழங் கப்படும்' என்று பிரிமியர் பவர் எக்யூப்மெண்ட்ஸ் நிறுவன இயக்குநர் ஏ.ராஜ்குமார் தெரிவித்தார்.

வேளாண் பல்கலை. பதிவாளர் பி.சுப்பையன், ஆராய்ச்சி இயக்குநர் எம்.பரமாத்மா, வேளாண் பொறியியல் கல்லூரி முதல்வர் எஸ்.சந்தானபோஸ் உள்ளிட்ட பலர் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**ரூ. 118 கோடியில் நீர் வள, நில வளத் திட்டம் நிறைவேற்றம்**

First Published : 04 May 2010 10:35:46 AM IST

காரைக்குடி, மே 3: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்ட தமிழக முதல்வரின் திட்டம் நீர் வள, நில வளத் திட்டம். மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் உலக வங்கி நிதி உதவியுடன், சிவகங்கை மாவட்டப் பகுதியை மேம்படுத்தும் வகையில் முதல் கட்டமாக ரூ. 118 கோடியிலான அணைக்கட்டுகள், கால்வாய்கள், கண்மாய்க் கரைகள் நவீனப்படுத்தப்பட்டு, மராமத்துப் பணிகள் முடிந்து, பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் 63 உப வடி நிலங்களில் பாசன நீர் ஆதாரங்களை நவீனப்படுத்தும் முகமாக ரூ. 2,547 கோடி உலக வங்கி நிதி உதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 2007-08 ஆம் ஆண்டில், முதல் கட்டமாக சிவகங்கை மாவட்டத்தில் மணிமுத்தாறு வடிநிலப் பகுதிகளில் 377 கண்மாய்கள் ரூ. 58.89 கோடியிலும், கோட்டக்

கரையாறு உபவடி நிலப் பகுதிகளில் 310 கண்மாய்கள் ரூ. 43 கோடியிலும், பாம்பாறு உபவடி நிலத்தின் சில பகுதிகளில் உள்ள 92 கண்மாய் கள் ரூ. 16.30 கோடியிலும் அணைக்கட்டுகள், கால்வாய்கள், கண்மாய்க் கரைகள் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிந்துள்ளன.

மழை பெய்யத் தொடங்கி விட்டால், இனி நீர் சிதறாமல் கண்மாய்க்குள் வந்து பாசன நீர் சேமிப்புக்குப் பங்கம் வராது என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தத் திட்டத்தின் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 779 கண்மாய்களில் பணிகள் செய்யப்பட்டுள்ளதால், 37 ஆயிரத்து 88 ஹெக்டேர் பாசனப் பரப்பு பயனடையவிருக்கிறது.

பொதுப் பணித் துறை நீர் வள ஆதார அமைப்பு, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகம், கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன் வளத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய 8 துறைகளை ஒருங்கிணைத்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் குறித்து பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு மணிமுத்தாறு வடிநில தேவகோட்டை கோட்ட செயறபொறியாளர் என். ஜோதிமணி கூறியது:

மணிமுத்தாறு உப வடிநிலப் பகுதியில் 377 கண்மாய்களில் புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நீர் ஆதாரம் சார்ந்த 27 அணைக்கட்டுகளில் புனரமைப்புப் பணிகள் மற்றும் கால்வாய்கள் சீரமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதோடு, 558 மடைகள் புதுப்பிக்கும் பணிகளும், 213 மடைகளில் மராமத்துப் பணிகளும், கண்மாய்க் கரைகளைப் பலப்படுத்தும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுௌ்ளன.

பாம்பாறு உபவடி நிலத்தில் சாக்கோட்டை, கண்ணங்குடி ஒன்றியப் பகுதிகளில் 92 கண்மாய்கள், 6 அணைக்கட்டுகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் 174 மடைகள் புதுப்பிக்கப்பட்டும், 78 மடைகளில் மராமத்துப் பணிகளும், 92 கண்மாய்களின் கரைகள் பலப்படுத்தும் பணிகளும் நிறைவடைந்துள்ளன. உலக வங்கி தொழில்நுடப்பக் குழு வழங்கிய புதிய தொழில்நுட்பங்களின் ஆலோசனையின் அடிப்படையில் பணிகள் செய்துள்ளோம். நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தினர் கண்மாய்க்குள் ஆழ்துளை கிண்று அமைக்க கோரிக்கை வைத்துள்ளது குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளோம் என்றார்.

விவசாயிகளுக்கு நீர்ப் பங்கீடு மற்றும் நீர் சேமிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைத்து, அவற்றுக்கான தலைவர் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கபபட்டு, செயல்பட்டு வருகிறது. அதன தலைவர்கள் பிஆர். கணேசன், பிஎஸ். சிவலிங்கம், முத்தழகு, ஜோதி, கலையரசன், சுப. சண்முகநாதன், ஜேசுராஜ், கேஆர்எஸ். இருதயராஜ், சேவியர் ஆகியோர் கூறுகையில், இந்தத் திட்டத்தால் மகிழ்ச்சியடைகிறோம் அதற்காக தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

பருவமழையின்போது 10 நாள்கள் வரத்துக் கால்வாய்களில் வரும் நீரினை ஒருங்கிணைத்தாலே 2 போகம் விவசாயத்துக்குப் பாசன நீர் போதுமானது.

கண்மாயில் தண்ணீர் குறையும் காலங்களில் கிணறு வைத்திருப்பவர்களை விவசாயிகள் நாட வேண்டியிருக்கிறது. அப்போது அவர்கள் அதிகத் தொகையைக் கேட்கிறார்கள். இதனைத் தவிர்க்க கண்மாய்க்குள் ஆள்துளை கிணறு அமைத்துக் கொடுத்தால் தேவைக்கு ஏற்ப சங்கங்கள் சார்பில் நீரினை பங்கிட்டுக் கொள்ளவும் முடியும். அதற்கு உரிய ஏற்பாடுகளையும் அரசு சார்பில் செய்து கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

மணிமுத்தாறு உப வடிநிலப் பகுதிகளில் 168 சங்கங்களும், பாம்பாறு உப வடிநிலப் பகுதிகளில் 75 சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்த நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், துல்லிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் சாகுபடிக்குத் தேவையான பயிற்சிகள், நவீனக் கருவிகள், துணைத் தொழில்களான கால்நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு, மீன்வளத் துறை சார்பில் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு, வண்ண மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை அமைப்பது, மீன்பிடி சாதனங்கள் வழங்குதல், வளர்ப்புக் கூடுகளில் மீன் குஞ்சுகள் வளர்த்தெடுௌ்த்தல் முதலான பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு மணிமுத்தாறு வடிநில தேவகோட்டை உதவி செயற்பொறியாளர் எஸ். சுந்தரமூர்த்தி கூறியது:

பாசன நீர்வளப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளது குறித்து எச்சரித்து உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம். கண்மாய்களில் பொதுப்பணித் துறை எல்கை குறித்து சர்வே செய்து உரிய அடையாள கல் ஊன்றியுள்ளோம். மேலும், நீர்ப் பாசன சங்க நிர்வாகிகள் இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானங்களைப் பாதுகாப்பது அவசியம் என்றார்.

**பரமக்குடியில் வைகை பாசன விவசாயிகள் சங்கக் கூட்டம்**

First Published : 04 May 2010 10:33:23 AM IST

பரமக்குடி, மே. 3: பரமக்குடியில் புதிதாக திறக்கப்பட்ட வைகை பாசன மூன்றாம் பகுதி விவசாயிகள் சங்க அலுவலகத்தில், சங்கத்தின் மாவட்டக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, மாவட்டத் தலைவர் எஸ்.சி. தவசீலன் தலைமை வகித்தார். பொன். தங்கச்சாமி, எஸ்.பி. கிருஷ்ணன், கே. பாலசுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். எம். மதுரைவீரன் வரவேற்றார்.

சங்க அலுவலகப் பெயர் பலகையை, புதுப்பட்டி டி. எத்திராஜ் திறந்து வைத்தார். சங்கக் கொடியை ஆர். பாஸ்கரபாண்டியன் ஏற்றினார்.

கூட்டத்தில், கீழப்பெருங்கரை அருகில் கூத்தன் கால்வாய்க்கு வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் செல்வதற்கு வசதியாக சமர் அணை கட்ட வலியுறுத்தியும், பரமக்குடியின் நீண்ட நாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனே நிறைவேற்ற வலியுறுத்தியும், விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க அரசை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**கோ-கோ சாகுபடி கலந்துரையாடல்**

பொள்ளாச்சி : ஆனைமலையில் விவசாயிகளுக்கு கோகோ சாகுபடி பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று நடக்கிறது.

தோட்டக்கலைத்துறை ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, கோகோ கலந்துரையாடல் நிகழ்ச்சி ஆனைமலை பரிமளா சுப்பிரமணியம் திருமண மண்டபத்தில் இன்று (6ம் தேதி) நடக்கிறது. கூட்டத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள், கேரளா மாநிலம் திருச்சூர் வேளாண்மை பல்கலைக்கழக வல்லுனர்கள் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கின்றனர்.

கோகோ கொள்முதல் செய்யும் தனியார் நிறுவனங்களும் விளக்கம் கொடுக்கின்றனர். மேலும் கோகோ ஒருங்கிணைப்பு குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களும் பேசுகின்றனர். ஆனைமலை பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு கோகோ சாகுபடியில் உள்ள தொழில்நுட்பம், வருவாய் பற்றி தெரிந்து கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

**பூசணி சாகுபடி வேளாண் அதிகாரி ஆய்வு**

குறிஞ்சிப்பாடி : குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு செய்தார்.குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் உள்ள அயன் குறிஞ் சிப்பாடி கிராமத்தில் அசோகன் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த 3 ஏக்கர் பூசணி சாகுபடியை வேளாண்மை இணை இயக்குநர் இளங்கோவன் ஆய்வு செய்தார். ஆய்வில் பூசணி பயிரிடப்பட்ட முறை குறித்தும் விவசாயிக்கு தேவையான தொழில் நுட்பங்கள், நோய் தடுப்பு முறைகள் குறித்து விளக்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் திருஞானம், வேளாண்மை அலுவலர் பரஞ்ஜோதி, உதவி வேளாண்மை அலுவலர் தனசேகர், அயன் குறிஞ் சிப்பாடி உழவர் மன்ற தலைவர் ராமலிங்கம், தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் சுந்தரமூர்த்தி, ஆனந்த் ஆகியோர் உடன் இருந்தனர்.

**சேதமடைந்த வாழை,தென்னை மரங்களின் விபரம் சேகரிப்பு : விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் மழையால் 108 ஏக்கரில் சாகுபடி செய்யப் பட்டிருந்த வாழை மரங்களும், 286 தென்னை மரங்களும் சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் சில வாரங்களாக, வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, பல இடங்களில் குடிநீர் பிரச்னை ஏற்பட்டது. இந்நிலையில் ஏப். 20ல் சூறாவளி காற்றுடன் கூடிய மழை பெய்தது. வெப்பம் தணிந்தது மட்டுமின்றி, ஆத்தூர், நிலக்கோட்டை பகுதிகளில் வாழை, தென்னை மரங்கள் சாய்ந்தன. மேலும் ஏப். 30ல் பரவலாக அனைத்து பகுதிகளிலும் இடி, மின்னலுடன் மழை பெய்தது. நிலக்கோட்டையில் அதிகபட்சமாக 156.2 மி.மீ., மழை பதிவாகியிருந்தது.

அடுத்தடுத்த மழையால் ஆத்தூர் காமராஜர், ஒட்டன்சத்திரம் நங்காஞ் சியாறு, வேடசந்தூர் அழகாபுரி அணைகளுக்கு நீர்வரத்து ஏற்பட்டது. இருப்பினும் குறிப்பிடத்தக்க அளவு, நீர்மட்டம் உயரவில்லை. பெரும்பாலான இடங்களில், வேளாண் பணிகளில் பாதிப்பை ஏற்படுத்தியது. அதிக பட்சமாக ஆத்தூர், நிலக்கோட்டை தாலுகாக்களில், வாழை, தென்னை சாகுபடியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் பாதிக் கப்பட்டனர்.

இந்நிலையில் மாவட்டத்தில் மழையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து வேளாண்துறை சார்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.'ஆத்தூர் ஒன்றியத்தில் 56 ஏக்கரில் வாழை மரங்களும், 223 தென்னை மரங்களும் சேதமடைந்துள்ளன.

நிலக் கோட்டை ஒன்றியத்தில் 52 ஏக்கரில் வாழை மரங்களும், 63 தென்னை மரங்களும் பாதிப்படைந்ததாக' கணக்கிடப்பட்டுள்ளது. சேதம் தொடர்பான முழுமையான விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்கான மொத்த மதிப்பு கணக்கீடு செய்யப்பட்டு, நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை வேளாண்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**மஞ்சள் விலை உயர்வால் சாகுபடி பரப்பு அதிகரிப்பு: 'எட்டாம் நம்பர்' ரக விதை மஞ்சள் தட்டுப்பாடு**

கோபிசெட்டிபாளையம்: மஞ்சள் விலை 16 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்துள்ளதால், கோபி பகுதியில் முதல் போகத்தில் விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் பயிரிட்டு வருகின்றனர். ஏ.எஸ்.டி., 16 ரக விதை நெல்லையடுத்து, 'எட்டாம் நம்பர்' க விதை மஞ்சளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல் போகத்துக்காக கடந்த 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 24 ஆயிரம் ஏக்கரில் வழக்கமாக அதிகளவில் நெல் பயிரிடப்படுவது வழக்கம். அடுத்து கரும்பும், மஞ்சளும் இடம்பெறும். முதல் போகத்தில் பயிரிடக்கூடிய ஏ.எஸ்.டி., 16 ரக நெல்லுக்கு ஏற்கனவே தட்டுப்பாடு உள்ளது. இதனால், பல விவசாயிகள் வேறு ரக விதை நெல்லை நாற்று விட்டுள்ளனர். இதனிடையே, உற்பத்தி குறைவு, பழைய மஞ்சள் அதிகளவில் விற்பனை மற்றும் அரபு நாடுகள் உள்ளிட்ட வெளிநாட்டுக்கு தேவை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு 16 ஆயிரம் ரூபாயை எட்டியது. இன்னும் விலை உயரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல் போக சாகுபடியில் விவசாயிகள் மஞ்சள் பயிரிட ஆர்வத்துடன் இருந்தனர்.

ஆனால், நோய் தாக்காத, பூச்சிகளால் பாதிப்பு ஏற்படாத எட்டாம் நம்பர் ரக மஞ்சள் விதை போதிய அளவில் கிடைக்கவில்லை. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில் எட்டாம் நம்பர் மஞ்சள்தான் செழிப்பாக வளரும் என்பதால், விவசாயிகள் அதிக விலை கொடுத்து இந்த ரக மஞ்சள் விதையை தேடி அலைகின்றனர். ஆனால், கடந்த சில மாதங்களாக மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் எட்டாம் நம்பர் மஞ்சளை விற்று விட்டனர். இதனால் விதை மஞ்சளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வாய்க்கால் பாசனம் இல்லாத கிணற்றுப் பாசனப் பகுதிகளில் இரண்டாம் நம்பர், நாட்டு மஞ்சள் மற்றும் ஒரிஸா மஞ்சள் விதைகள்தான் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால், பருவமழை தவறியதாலும், கோடை மழை ஏமாற்றம் அளிப்பதாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. கிணறுகளில் போதியளவில் தண்ணீர் இல்லாமல், கிணற்றுப்பாசன விவசாயிகள் மஞ்சள் பயிரிடவில்லை.

கோபி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பதால், அப்பகுதிகளில்தான் மஞ்சள் அதிகளவில் பயிரிட வாய்ப்புள்ளது. ஆனால், அப்பகுதிகளில் நன்கு விளையக் கூடிய எட்டாம் நம்பர் மஞ்சள் விதைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர். 'சென்றாண்டு முதல் மற்றும் இரண்டாம் போகத்தின்போது எட்டாம் நம்பர் மஞ்சள் விதை நெல் கிலோ 30 ரூபாய் வரை விற்றது. ஆனால் தற்போது கிலோ 50 ரூபாயை தாண்டி விட்டது' என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

**உற்பத்தி பாதிப்பால் காய்கறி விலை உயர்வு**

ஓசூர்: ஓசூரில் உற்பத்தி குறைவால் காய்கறிகள் விலை, 'கிடுகிடு'வென உயர்ந்து வருவதால் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் காய்கறிகள் வாங்க முடியாமல் திணறி வருகின்றனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் காய்கறிகள் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகளை விவசாயிகள் ஓசூர், தேன்கனிக்கோட்டை உழவர் சந்தைகள் மற்றும் பத்தலப்பள்ளி மொத்த காய்கறி மார்க்கெட், சில்லறை விற்பனை கடைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

உள்ளூர் விற்பனைக்கு போக, ஓசூரில் இருந்து வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர் உழவர் சந்தைக்கு விவசாயிகள் தினம் 130 முதல் 150 டன் காய்கறிகள்

வரை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இரு வாரமாக உழவர்சந்தை மற்றும் காய்கறி மார்க்கெட்டுகளுக்கு காய்கறிகள் வரத்து குறைந்தது. ஓசூர் உழவர்சந்தைக்கு தற்போது 80 முதல் 100 டன் காய்கறிகள் வரை மட்டுமே விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று 94 டன் காய்கறிகள் விற்பனைக்கு வந்தனர். இவற்றின் மதிப்பு 13 லட்சத்து 28 ஆயிரத்து 684 ரூபாய். அதிகப்பட்சமாக தக்காளி பத்து டன் வந்தது. பச்சை மிளகாய் 1,350 கிலோவும், கேரட் 4,250 கிலோவும், பீட்ரூட் 2,860 கிலோவும், பீன்ஸ் 3,150 ரூபாயும், முட்டைகோஸ் 4,250 கிலோவும், காளிஃபிளவர் 3,680 கிலோவும், 2,330 கிலோவும், அவரை 1,750 கிலோவும் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். கோடை காலம் துவங்கி விட்டதால் காய்கறிகள் உற்பத்தி குறைந்து விட்டது. உழவர்சந்தை மற்றும் மார்க்கெட்டுகளுக்கு காய்கறிகள் வரத்து சராசரியாக குறைந்து வரும் நிலையில், தினம் அவற்றின் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது.

கடந்த இரு மாதம் முன் கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ 14 ரூபாய் முதல் 18 ரூபாயும், கிலோ 10 பத்து ரூபாய்க்கு விற்ற பச்சை மிளகாய் 28 ரூபாய் முதல் 34 ரூபாயும், கிலோ 15 ரூபாய்க்கு விற்ற கரட் 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையும், கிலோ 14 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ் 24 ரூõபாய் முதல் 30 ரூபாய் வரையும், கிலோ 2 ரூபாய் விற்ற முட்டைகோஸ் எட்டு ரூபாய் முதல் 12 ரூபாய் வரையும், கிலோ 6 ரூபாய் விற்ற காளிஃபிளவர் 12 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையும், கிலோ 10 ரூபாய் விற்ற கத்திரிக்காய் 12 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையும், கிலோ 15 ரூபாய் விற்ற அவரை 22 ரூபாய் முதல் 28 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.சில்லரை விற்பனை கடைகளில் இதை விட 40 சதவீதம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

குறிப்பாக அன்றாட சமையலில் முக்கிய பங்கு வகிக்கும் முட்டைகோஸ், தேங்காய், மிளகாய், கேரட், கத்தரிக்காய், வெங்காயம் மற்றும் ஆகியவற்றின் விலை ஒரு நாளைக்கு ஒரு விலை விற்பனை செய்யப்படுகிறது. நடுத்தர மற்றும் ஏழை மக்கள் அதிக விலை கொடுத்து காய்கறிகள் வாங்கி சமையல் செய்ய முடியாமல் திணறி வருகின்றனர். இது குறித்து காய்கறி வியாபாரிகள் கூறுகையில், 'இரு மாதமாக கடும் வறட்சி நிலவுவதால் காய்கறி உற்பத்தி குறைந்து விட்டது. மேலும், தற்போது சீன் இல்லாததால், மொத்த மற்றும் தினசரி மார்க்கெட்டுகளுக்கு காய்கறிகள் வரத்து குறைவாக உள்ளது. இதனால், விலை உயர்ந்து வருகிறது. வரும் ஜூன் மாதத்துக்கு பின் விலை குறைய வாய்ப்புள்ளது' என்றனர்.

**பாசிப்பயறு சாகுபடிக்கு சான்று: விதை வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை**

ராசிபுரம்: 'பாசிபயறு சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே உபயோகிக்க வேண்டும்' என, எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: எலச்சிபாளையம் வட்டாரத்தில் மழை பெய்து வருவதால், விவசாயிகள் பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து பயனடைய வேண்டும். பாசிப்பயறு குறைந்த நாளில் குறைந்த செலவில், அதிகமான வருவாய் அளிக்ககூடிய பயிர். இந்த பயிர்களின் வேர்ப்பகுதியில் வேர்முடிச்சுகள் உள்ளதால், சாகுபடி செய்யும் நிலங்களின் வளம் கூடுகிறது. பயறு வகை பயிர்கள் நல்ல கால்நடை தீவனமாகவும் பயன்படுகிறது. வம்பன் 2, கே 851, கே.எம்., 2, கோ 6 ரகங்களை உபயோகிக்கலாம். சான்று பெற்ற விதைகளையே உபயோகிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதை தேவை. ஒரு சதுர மீட்டரில் 33 செடிகள் இருக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ., இடைவெளியும், செடிக்கு செடி 10 செ.மீ., இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

ஒரு கிலோ விதையுடன், 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி உயிரியல் மருந்து கலந்து 24 மணி நேரமும் வைத்திருக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் எட்டு கிலோ விதையுடன் ஒரு பொட்டலம் டிரைசோபியம், பாஸ்போட்

பாக்டீரியா, நுண்ணுயிர் உரங்களை தேவையான அளவு ஆறின கஞ்சியில் கலந்து விதைகளை நிழலில் உலர்த்திய பின் விதைக்க வேண்டும். கடைசி உழவில் போதிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 44 ஜிப்சம், 11 கிலோ யூரியா, 62 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகிய உரங்களை இடவேண்டும். விதைத்தவுடன் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் போதிய மணலுடன் கலந்து மேலாக இடவேண்டும். அல்லது ஒரு ஏக்கருக்கு பயறு வகைகளான இரண்டு கிலோ நுண்ணூட்டச்சத்து உரத்தை போதிய மணலுடன் கலந்து மேலாக இட வேண்டும்.

இறவை பயிராக சாகுபடி செய்பவர்கள், பயறு வகைப்பயிர்களில் களைகளின் வளர்ச்சியை தவிர்க்க களைகள் முளைக்கும் முன்பே களைக் கொல்லி தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 மி.லி., புளூகுளோரலின் களைக் கொல்லியை நீரில் கலந்து விதைத்த மூன்றாம் நாள் தெளிக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் விதைத்த 20ம் நாள் மற்றும் 40 நாளில் கைகளால் களை எடுக்க வேண்டும். பயிர்களில் அதிக மகசூல் எடுக்க பயிர்கள் பூக்க ஆரம்பித்தவுடன் 4 கிலோ 'டிஏபி' உரைக்கரைசலை ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து கை தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். தொழில் நுட்பங்களை கடைபிடித்து பயறுவகை பயிர்களில் அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மரவள்ளியில் அதிக மகசூல் வேளாண்துறை 'அட்வைஸ்'**

பெரம்பலூர்: 'பெரம்பலூர் மாவட்டத்தில் மரவள்ளியில் நுண்சத்து குறைபாட்டினால் பயிரில் கிழங்கு மகசூலும், மாவுச்சத்து குறைவும் ஏற்பட வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நிவர்த்தி முறைகளை சரிவர கையாண்டு அதிக மகசூல் பெறலாம்' என விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ரோவர் வேளாண் அறிவியல் மைய மண்ணில் துறை தொழில்நுட்ப வல்லுநர் பிரிஸ்கோ பிளேவியா மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பலரும் தங்கள் வயல்களில் தற்போது மரவள்ளி பயிரை பயிரிட்டுள்ளனர். தற்போது ஒன்று முதல் ஒன்றரை மாத மரவள்ளி பயிரில் பரவலாக நுண்ணூட்ட சத்து குறைபாடு காணப்படுகிறது. இதனால் மரவள்ளி பயிர் வெளிறிய மஞ்சள் கலந்து பச்சை நிறம் அடைந்து நரம்புகள் தெளிவாக தெரியும் வண்ணம் காணப்படுகிறது. இலைகள் அளவில் சிறுத்தும், வளைந்தும் மாறுபாடு அடைந்து காணப்படுகிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு விவசாயிகள் இரும்பு சல்பேட் என்கிற அன்ன பேதி உப்பு10 கிராம், துத்தநாக சல்பேட் ஐந்து கிராம், போரிக் அமிலம் மூன்று கிராம் மற்றும் யூரியா 20 கிராம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் கரைத்து குறைபாடு காணப்படும் பருவங்களிலும், முக்கியமாக நட்ட 60, 75 வது மற்றும் 90 வது நாட்களிலும் 15 நாட்கள் இடைவெளி விட்டு குறைபாடு மறையும் வரை தெளிக்கவேண்டும்.

மாவட்டத்தில் மண்ணின் கார அமில நிலை பொதுவாக 7.8 என்ற அளவிற்கு மேலாக உள்ளதாலும, சுண்ணாம்பு தன்மை சில இடங்களில் மிகுந்து காணப்படுவதாலும், தண்ணீரை தேக்கி கட்டாமல் காய்ச்சலும், பாய்ச்சலுமாக பாசனம் செய்யுமாறும் விவசாயிகள் அறிவுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**உற்பத்தி பொருட்கள் தரமானதாக இருக்க இயற்கை விவசாயம் அவசியம்: நம்மாழ்வார்**

பெரம்பலூர்: பெரம்பலூர் சமூக சேவை சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த இயற்கை விவசாய கூட்டுப்பண்ணையப்பயிற்சி நேற்று நடந்தது.
பயிற்சிக்கு சமூக சேவை சங்க செயலாளர் லாரன்ஸ் தலைமை வகித்து பேசுகையில், பெரம்பலூர் சமூக சேவை சங்கம் பெரம்பலூர்,திருச்சி, அரியலூர் ஆகிய 3 மாவட்டங்களில் 13 ஒன்றியங்களில் செயல்பட்டுவருகிறது. பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் இந்த அமைப்பு தற்போது புதிதாக ஒருங்கிணைந்த இயற்கை விவசாய கூட்டுப்பண்ணை பயிற்சி மையத்தை துவக்கி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறது என்றார்.இந்திய உழவர்

இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் பெரியநாயகசாமி இயற்கை விவசாயம் குறித்து பேசினார். இதைதொடர்ந்து இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசுகையில், ரசாயன விவசாயத்தில் உற்பத்தி ஆதாரங்கள் சீர்குலைந்து விட்டன. உணவு நஞ்சாகிவிட்டது. பொருளாதார அடிப்படை தகர்ந்து விட்டது. நிலம் தனது தன்மையில் பொலிவிழந்து விட்டதால் விவசாயிகள் கடனாளியாகிவிட்டார்கள். இந்த சூழலில் இயற்கை விவசாயமும், அதற்கான இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகளும் இன்றியமையாததாகிவிட்டது.கடந்த 40 ஆண்டுகளில் இந்திய, தமிழக விவசாயத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. நாட்டின் உணவுத்தேவையை பூர்த்தி செய்யவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும் பசுமைப்புரட்சி விவசாயம் புகுத்தப்பட்டது. பசுமைப்புரட்சி வழியாக விஞ்ஞான முறை என்ற பெயரில் ஒட்டு விதைகள், எந்திரங்கள், ரசாயன உரங்கள், நோய்பூச்சி மற்றும் களை கொல்லி மருந்துகள் நுழைந்தன.

இதன் விளைவாக இன்று விவசாயத்தின் முக்கிய இயற்கை ஆதாரங்களான நீர், மண்வளம், காடுகள் யாவும் சீர்கெட்டு உள்ளன. கடந்த 10 ஆண்டுகள் சிறிது சிறிதாக பசுமைப்புரட்சியின் தீய விளைவுகளை விவசாயிகளும், மற்றவர்களும் உணரத்துவங்கியுள்ளனர். இதற்கு மாற்று விவசாய அணுகுமுறைகளை உலகின் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் பலர் முயற்சித்து வருகிறார்கள். விவசாயத்தில் உற்பத்தி பொருட்கள் தரமானதாக இருக்க இயற்கை விவசாயம் அவசியம் தேவை என்றார்.பயிற்சியில் மண்புழு உரம், அசோலா, பஞ்சகாவியா ,மூலிகைப்பூச்சி விரட்டி தயாரிக்கும் முறைகள் மற்றும் மாட்டுப்பண்ணை, கொட்டில் முறை ஆடுவளர்ப்பு, மீன்வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கிண்ணிக்கோழி, காளான்வளர்ப்பு, முயல்வளர்ப்பு போன்றவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வானகம் அமைப்பின் பொறுப்பாளர்கள் ஏங்கல்ஸ், கரிகாலன், குமரவேல் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியில் திருச்சி, தஞ்சாவூர், கோவை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ,பெரம்பலூர், அரியலூர் உட்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு விவசாயத்திற்கு தேவையான இடுபொருட்கள், பயிற்சி கையேடுகள் ஆகியவை வழங்கப்பட்டன. முடிவில் உதவி செயலர் பிரான்சிஸ் நன்றி கூறினார்.

**மரவள்ளியில் அதிகமகசூல் பெற வேளாண் துறை ஆலோசனை**

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் மரவள்ளியில் நுண்சத்து குறைபாட்டினால் பயிரில் கிழங்கு மகசூலும், மாவுச்சத்து குறைவும் ஏற்பட வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நிவர்த்தி முறைகளை சரிவர கையாண்டு அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.இதுகுறித்து ரோவர் வேளாண் அறிவியல் மைய மண்ணியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் பிரிஸ்கோ பிளேவியா, திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பலரும் தங்கள் வயல்களில் தற்போது மரவள்ளி பயிரை பயிரிட்டுள்ளனர்.

தற்போது ஒன்று முதல் ஒன்றரை மாத மரவள்ளி பயிரில் பரவலாக நுண்ணூட்ட சத்து குறைபாடு காணப்படுகிறது. இதனால் மரவள்ளி பயிர் வெளிறிய மஞ்சள் கலந்து பச்சை நிறம் அடைந்து நரம்புகள் தெளிவாக தெரியும் வண்ணம் காணப்படுகிறது. மேலும் இலைகள் அளவில் சிறுத்தும், வளைந்தும் மாறுபாடு அடைந்து காணப்படுகிறது. இதனை நிவர்த்தி செய்வதற்கு விவசாயிகள் இரும்பு சல்பேட் என்கிற அன்ன பேதி உப்பு10 கிராம், துத்தநாக சல்பேட் 5 கிராம், போரிக் அமிலம் 3கிராம் மற்றும் யூரியா 20 கிராம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீருக்கு என்ற அளவில் கரைத்து குறைபாடு காணப்படும் பருவங்களிலும், முக்கியமாக நட்ட 60, 75 வது மற்றும் 90 வது நாட்களிலும் 15 நாட்கள் இடைவெளி விட்டும் குறைபாடு மறையும் வரை தெளிக்கவேண்டும். மேலும் மாவட்டத்தில் மண்ணின் கார அமில நிலை பொதுவாக 7.8 என்ற அளவிற்கு மேலாக உள்ளதாலும், சுண்ணாம்பு தன்மை சில இடங்களில் மிகுந்து காணப்படுவதாலும், தண்ணீரை தேக்கி கட்டாமல் காய்ச்சலும், பாய்ச்சலுமாக பாசனம் செய்யுமாறும் விவசாயிகள் அறிவுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**தென்னையில் அசோலா ஊடுபயிர் சாகுபடி : விவசாயிகளுக்கு விளக்கம்**

பட்டுக்கோட்டை: தென்னையில் அசோலா ஊடுபயிர் பற்றிய புதிய யுக்தி குறித்து பேராசிரியர்கள் சுருளிராஜன், ராஜப்பன், நடராஜன் ஆகியோர் அறிக்கையில் கூறியிருப்பதாவது; தென்னையில் கலப்புப்பயிர் முறை வெகுவாக பின்பற்றப்படுகிறது. தென்னையில் ஊடுபயிராக பல வருட மற்றும் ஒரு வருட ஊடுபயிர்கள் இந்தியாவில் பயிரிடப்படுகிறது.

இது வருவாய் ஈட்ட ஒரு வழியாகும். தளைச்சத்தைச் சேர்க்கும் நீலப்பச்சை பாசி, அசோலா குளம், குட்டை, கால்வாய், நெற்வயல்களில் மிதக்கிறது. பொதுவாக நீர்நுண் தாவரமாக கண்டறியப்பட்டுள்ளது. அசோலா நீர் நுண் தாவரம், பச்சை நுண்ம குச்சியான அனபீனா அசோலா தன்னிடம் ஒருமித்த இணைவாக அதனின் மேற்புற இலை இடுக்குகளில் கொண்டுள்ளது.

தளைச்சத்தை கொண்டு உள்ளது. இதில் இலைகள் செழிப்பான பசுந்தாள் உரமாக உள்ளது. சீனா, கிழக்காசிய நாடுகள் மற்றும் இந்தியாவில் உயிர் உரமாக பயன்படுத்தப்படுகிறது. அசோலா வருடம் முழுவதும் வளரும் தன்மையுடையது. சிமெண்ட் தொட்டிகள் அல்லது வயல்வெளிகளில் வளர்க்கலாம். தென்னை மரங்களுக்கு இடையே குழிகள் வெட்டி ஊடுபயிராக அசோலா வளர்க்கப்படுகிறது.

சூப்பர் பாஸ்பேட், கார்போ ப்யூரான் 3 சதவீதம் குருணை திரும்பவும் அடுத்தடுத்து அசோலா வளர்ப்பு தென்னையில் ஊடுபயிராக செயல்படுகிறது. அசோலா வளர்ப்பதால் தென்னை வளர்ச்சி மகசூல் பாதிப்பு ஏதும் இல்லை. எனவே விவசாயிகள் அசோலா மற்றும் நீலப்பச்சை பாசியை உற்பத்தி பெருக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளனர்.

**தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை திறந்த வெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்கத்தின் வழியாக தென்னை சாகுபடி தொழில் நுட்பங்கள் என்ற சான்றிதழ் பாடம் நடத்துகின்றனர். இதில், சேருவதற்கு தமிழ் நன்கு எழுத, படிக்க தெரிந்தால் போதுமானது. பயிற்சி காலம் ஆறு மாதம். மாதம் ஒரு முறை நேர்முக பயிற்சி சனி அல்லது ஞாயிற்று கிழமைகளில் நடக்கும்.

இப்பயிற்சிக்கான கட்டணம் ஆயிரத்து 500 ரூபாயாகும். இந்தாண்டு இப்பயிற்சி நவீன தொழில்நுட்பங்களுடன் செயல்முறை விளக்க கல்வியாக நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சியை முடித்த விவசாயிகள் தென்னை வளர்ப்பில் நிபுணத்துவம் பெற்று தென்னைக்கான நவீன தொழில்நுட்பங்களுடன் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதால் விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திகொள்ளலாம். இதுதவிர, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் மூலிகைப்பயிர்கள், அலங்காரத் தோட்டம் அமைத்தல், காளான் வளர்ப்பு, பழங்கள் மற்றும் காய்கறிகளை பதப்படுத்துதல், தரிசு நில மேம்பாடு, நவீன பாசன மேலாண்மை, தேனி வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், பண்ணைக்கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பழுது பார்த்தலும், பராமரித்தலும் போன்ற சான்றிதழ் பாடங்களும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி விவசாயம் சார்ந்த சுய வேலைவாய்ப்பை உருவாக்கி கொள்ளலாம். கூடுதல் விபரம் அறிய, 'பேராசிரியர் மற்றும் தலைவர், தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் - 614 906, தஞ்சாவூர் மாவட்டம்,' என்ற முகவரியில் அல்லது 04373- 260205 என்ற ஃபோன் எண்ணிலோ அழைத்து விண்ணப்ப படிவம் பெற்று இந்த சான்றியதழ் பாட பிரிவில் சேரலாம். இவ்வாறு வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் நடராஜன் தெரிவித்தார்.

---

**மா மகசூலை பாதிக்கும் தத்துபூச்சிகள் தோட்டக்கலைத்துறை ஆலோசனை**

பெரியகுளம் : மா மகசூலை பாதிக்கும் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த தோட்டக்கலை கல்லூரி நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. வெயிலின் தாக்கத்திலிருந்து, தற்போது மழை பெய்து வருவதால் மாறுபட்ட தட்பவெப்ப நிலை காரணமாக மா மரங்களில் தத்துப்பூச்சிகள் அதிகளவில் காணப்படுகிறது.

பூச்சிகள் தாக்கத்தால் பூங்கொத்தில் உள்ள பூ மொக்குகள் கருகி உதிர்ந்து விடும். மா இலைகளில் தேன் போன்ற கழிவு திரவமும், கரும்பூஞ்சாணமும் தென்படும். கட்டுப்படுத்தும் முறைகள்: பூக்கள் மலரும் சமயத்திற்கு இரண்டு வாரங்கள் முன்பாக பயிர்பாதுகாப்பினைத் தொடங்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது சிறிய மற்றும் பெரிய கிளைகளின் பட்டைகளில் பூச்சிமருந்து படுமாறு தெளிக்க வேண்டும். நன்கு கலந்த பின்பு டீபால் ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

மரக்கிளைகளை கவாத்து செய்யவேண்டும். களைகளை நீக்குவதன் மூலம் பூச்சிகளின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். விளக்குப் பொறி எக்டருக்கு 1 என்ற எண்ணிக்கையில் வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். அசிபேட் 1 கிராம் ஒரு லிட்டர் நீரில் அல்லது பாசலோன் 2 மில்லி லிட்டர் ஒரு மில்லி லிட்டர் நீரில் கலந்து பத்து நாட்கள் இடைவெளியில் மூன்று முறையாக மா பூ பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும்.

மா வடு வரும் நேரத்தில் கார்பரில் இரண்டு கிராம் ஒரு லிட்டர் நீரில் அல்லது பென்தியான் 1 மி.லி கரைத்து தெளித்தும் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் என தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

**இயற்கை விவசாயத்தின் பலன்கள் குறித்த கருத்தரங்கம் : சாகுபுரம் தொழிற்சாலையில் நடந்தது**

ஆறுமுகநேரி : சாகுபுரம் டி.சி.டபிள்யூ.நிறுவனத்தின் சார்பில் இயற்கை விவசாயத்தின் பலன்கள் மற்றும் சிறப்புகள் பற்றிய கருத்தரங்கம் நடந்தது.

திருச்செந்தூர் ஆர்.டி. ஓ., பாக்கியம் தேவகிருபை, தாசில்தார் இளங்கோ, திருச்செந்தூர் பஞ்., யூனியன் சேர்மன் உமாதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் பங்கேற்பாளர்களாக சுமார் 85 விவசாயிகளும், 40 மகளிர் சுய உதவிகுழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். டி.சி.டபிள்யூ.,நிறுவனத்தின் மூத்த உதவித் தலைவர் ஸ்ரீனிவாசன் கருத்தரங்கை துவக்கி வைத்தார். புளியங்குடியைச் சேர்ந்த அந்தோணிசாமி இயற்கை கழிவுகளை உரங்களாக பயன்படுத்தி வாழ்வின் மேன்மை நிலையை அடைந்ததையும், இது போன்று ஒவ்வொரு விவசாயியும் இயற்கை விவசாயத்தின் மகத்துவத்தினை புரிந்து கொண்டு நடைமுறைப்படுத்தி வெற்றி பெற ஆலோசனை வழங்கினார். இயற்கை விவசாய சேவா சங்கத்தைச் சார்ந்த கோமதிநாயகம் பக்க விளைவுகள் இல்லாத காய்கனிகள் மற்றும் பயிர்களை பயிர் செய்வதன் முக்கியத்துவத்தையும், பூச்சிக்கொல்லிகளினால் ஏற்படும் பெரும் பாதிப்புகளையும் பற்றிபேசினார். சென்னையைச் சேர்ந்த இயற்கை விவசாயி நடேசன் ஜவ்வரிசி கழிவில் இருந்து பயோ கேஸ் தயாரிக்கும் எளிமையான முறையினை வீடியோ ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார். மேலும் சொட்டு நீர் பாசனத்தின் மகத்துவத்தினையும் உதாரங்களுடன் விளக்கிக் கூறினார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் கீழ்குளம் விவசாய சங்க தலைவர் பெரியதுரை, மேலாத்தூரைச் சேர்ந்த யசோதா சதீஷ்குமார், நல்லூர் ஊர்த் தலைவர் சுடலைமுத்து, ஆறுமுகநேரி கீழ்குளம் விவசாய சங்கத் தலைவர் கல்யாணசுந்தரம்,

முடிவைத்தானேந்தல் முன்னாள் சுகாதார ஆய்வாளர் சண்முகம் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேலும் அருகில் உள்ள கிராமங்களான தலைவன்வடலி, கீரனூர், செல்வன்புதியவனூர், குமாரபண்ணையூர் ஆகிய கிராமங்களைச் சார்ந்த விவசாயிகளும் ஏராளமாக கலந்து கொண்டனர்.

**கோடை நெல்லில் களை நீக்கும் முறை**

தென்காசி: கோடை நெல்லில் களை நீக்கும் முறை பற்றி செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரம் சாம்பவர்வடகரை, கிளாங்காடு, புளியரை பகுதிகளில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்துள்ள நெல் பயிரில் கோனோவீடார் மூலம் களை நீக்கம் செய்ய இதுவே தக்க தருணமாகும். கோனோவீடார் மூலம் நட்ட 10, 20, 30, 40ம் நாட்களில் களைகளை நீக்கிட வேண்டும். இக்களை நீக்கும் கருவியை பன்படுத்துவதன் மூலம் களைகள் நீக்கப்பட்டு, களைகள் உரமாக்கப்படுகின்றன.

மேலும் மண் மிருதுவாகி வேர்கள் அதிகம் வளர்ச்சியடைகிறது. பயிருக்கு காற்றோட்டம் கிடைக்கிறது. சிம்புகள் அதிகம் வெடித்து பயிர்கள் செழித்து வளர ஏதுவாகிறது. வேர்களை சுற்றியுள்ள மண் கிளறி விடப்படுவதால், உரச்சத்துக்கள் பயிருக்கு எளிதில் கிடைக்கிறது. கரையாத சத்துக்களும் கரைந்து, பயிருக்கு சத்துக்கள் எளிதில் கிடைக்கிறது. எனவே கோனோவீடார் மூலம் களைகளை முழுமையாக நீக்கி நெல் பயிரில் விவசாயிகள் நல்ல மகசூல் பெற்றிட வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**தொடக்க கூட்டுறவு சங்கத்தில் வாழை, பலா பழங்கள் ஏலம்**

வாணியம்பாடி: வாணியம்பாடி தாலுகா, ஆண்டியப்பனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதன்கிழமைகளில் வாழை மற்றும் காய்கறிகள், வெள்ளிக்கிழமைகளில் தேங்காய் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது.இதில் ஆண்டியப்பனூர், லாலாபேட்டை, குரிசிலாப்பட்டு, கொடுமாம்பள்ளி உட்பட பல ஊர்களில் இருந்து விவசாயிகள் ஏலத்திற்கு இவற்றை கொண்டு வருகின்றனர். திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குப்பம், ஒசூர் ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் பங்கேற்று ஏலம் எடுத்து வருகின்றனர்.நேற்று வாழை, காய்கறிகள் மற்றும் 50க்கும் அதிகமான பலா பழங்களை ஏலத்திற்காக கூட்டுறவு கடன் சங்கத்திற்கு விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். இதை வியாபாரிகள் போட்டி போட்டு ஏலத்தில் எடுத்தனர். ஏலம் முடிந்த கையோடு விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டதால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**சொர்ணாவாரி நெல் சாகுபடி துவக்கம் : பிடாகம் பகுதி விவசாயிகள் ஆர்வம்**

விழுப்புரம் : சொர்ணாவாரி பட்டத் தில் நெல் சாகுபடி செய் யும் பணியில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

சொர்ணம் என்றால் தங்கம் என்பது பொருள். எனவேதான் சொர்ணாவாரி பட்டத்தில் நெல் பயிர் செய்தால் விளைச்சலும் அமோகமாக இருக்கும். மார்க்கெட்டிலும் நெல் மூட்டைகளுக்கு கூடுதல் விலையும் கிடைக்கும். இதனால் சொர்ணாவாரி பட்டத்தில் நெல் பயிர் செய்ய கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு பாசன வசதி உள்ள விவசாயிகள் அதிக ஆர்வமுடன் ஈடுபடுவார். தற்போது இந்த பருவத்திற்கான நாற்று விடப் பட்டு நடவு செய்யும் பக்குவத்திற்கு வந்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக கோடை மழை திடீர் திடீரென பெய்வதால் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு பயனாக உள்ளது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் ஆர்வமுடன் நெல் நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விழுப்புரம் அடுத்த பிடாகம் பகுதியில் சொர் ணாவாரி பட்ட நெல் நடவு செய்வதற்காக 100க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் உழவு பணியினை விவசாயிகள் துவங்கியுள்ளனர். இந்த கிராமத்தை ஒட்டி ஆற்று பகுதி உள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் போதுமான அளவு உள்ளது. இதனால் வயல் வெளியில் பரவலாக தண்ணீர் தேங்கி நிற்கிறது.

மேலும் விவசாயிகள் நிலத்தை உழுவதால் அதிலிருந்து மண்புழு, வெட் டுக்கிளி, பட்டாம்பூச்சிகள் உள்ளிட்ட பல்வேறு வகை வண்டுகள் பறந்து செல் கின்றன. இவற்றை பிடித்து சாப்பிடுவதற்காக ஏராளமான கொக்கு மற்றும் நாரை போன்ற பறவைகள் பல்வேறு பகுதிகளிலிருந்து அதிகளவில் இந்த பகுதிக்கு வந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டத் தில் இந்த பருவத்திற்கு வேறு எங்கும் இந்தளவிற்கு நெல் சாகுபடி பரப்பு இல்லாததால் அப்குதிகளிலுள்ள ஏராளமான பறவைகள் இங்கு வந்து குவிந் துள்ளது குறிப்பிடத்தக்கது. டிராக்டர் மூலம் உழவு செய்யும் போதே இப்பறவைகள் சிறிதும் அச்சமின்றி அருகிலேயே பறக் கின்றன. இது பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமான காட்சியாக அமைந்துள்ளது.

**கொப்பரை மையம் செஞ்சேரியில் திறப்பு : பல்லடத்தில் விவசாயிகள் தவிப்பு**

பல்லடம் : கொப்பரை கொள்முதல் மையம் செஞ்சேரியில் மீண்டும் துவக்கப்பட் டுள்ளது; பல்லடத்தில் இன்னும் துவங்கப்படாமல் உள்ளதால், கொப்பரை உற்பத்தி விவசாயிகள் தவிப்படைகின்றனர்.

தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காப்பாற்றும் நோக்கத்துடன், மத்திய, மாநில அரசுகள் இணைந்து கூட்டுறவு சொசைட்டி மூலம் விவசாயிகளிடம் இருந்து ஆண்டுதோறும் கொப்பரைகள் கொள்முதல் செய்கின்றன. கடந்த மார்ச் 23ம்தேதியுடன் பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு கொள்முதல் மையங்களில் கொப்பரை கொள்முதல் நிறுத்தம் செய்யப்பட்டது. இருப்பு வைக்க போதிய கிடங்கு வசதி இல்லாததால், ஏப்ரலில் மீண்டும் துவங்க வேண்டிய கொள் முதல் துவங்கவில்லை. இந்நிலையில், செஞ்சேரியில் உள்ள கொள்முதல் நிலையத்தில் ஒரு கிலோ 44.50 ரூபாய்க்கு சில நாட் களுக்கு முன் கொப்பரை கொள்முதல் துவங்கியது.

பல்லடம் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைகளை இருப்பு வைக்க, இட வசதி இல்லாததால் பல்லடத்தில் கொப்பரை கொள் முதல் இன்னும் துவங்கவில்லை. செஞ்சேரி கொள் முதல் மையம் செயல்பட துவங்கியுள்ள நிலையில், பல்லடத்தில் கொள்முதல் துவங்காதது பல்லடம் பகுதி விவசாயிகளை தவிப் படையச் செய்துள்ளது. இதற்கு காரணம், வெளிமார்க்கெட் கொப்பரை கொள்முதல் விலை கிலோ 34 ரூபாய், அரசு கொள்முதல் மையத்தில் ஒரு கிலோ கொப்பரை கொள்முதல் விலை 44.50 ரூபாய்.

**ஆப்பிள் தக்காளி சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்!**

பொங்கலூர் : பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது ஆப்பிள் தக்காளி சாகுபடி செய் வதையே விவசாயிகள் விரும்புகின்றனர்.

தக்காளி விரைவில் அழுகக் கூடிய பொருள். மழை மற்றும் வெயில் காலங்களில் ஏராளமாக வீணாகிறது. இக்காலங்களில் விளைச்சலாகும் தக்காளியில் மூன்றில் இரண்டு பகுதி வீணாவதால், விவசாயிகளுக்கு இழப்பு அதிகமாகிறது. நாட்டு தக்காளி பயிரிட்டுக் கொண்டிருந்த விவசாயிகள், சில ஆண்டுகளாக புதிய ரகங்களை பயிரிட்டு வந்தனர். இவை, நாட்டு தக்காளி ரகத்தை விட, சற்று கூடுதல் நாட்கள் கெடாமல் இருக்கின்றன. தற்போது ஆப்பிள் தக்காளி சாகுபடி செய்வதில் விவசாயிகள் கவனம் செலுத்துகின்றனர். இதற்கு முன், பெங்களூரு, ஒசூரில் இருந்து இந்த ரகம், திருப்பூர் மார்க் கெட்டுக்கு வந்து கொண்டிருந்தது. அங்கு அதிக மழைப் பொழிவு மற்றும் ஈரப்பதம் அதிகம் என்பதால், அங்குள்ள விவசாயிகள் இந்த ரகங்களை அதிகம் பயிர் செய்து வந்தனர்.

இத்தக்காளி, ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும் தன்மை கொண்டது. இதை பயிர் செய்ய முதல் தடவை மட்டும் கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளது. இரண்டாம் போகத்தில் இருந்து மற்ற ரகங்களுக்கு செய்யும் செலவை விட, மிகவும் குறைவாகவே ஏற்படுகிறது. ஆப்பிள் தக்காளி மற்ற ரகங் களை விட, நீண்ட நாட்கள் காய்க்கும் திறனுடையது. மற்ற ரகங்கள் ஒருமுறை மட்டுமே காய்க்கும்; ஆப்பிள் தக்காளி இரண்டு போகம் விளைந்து மகசூல் தரக்கூடியது.

பொதுவாக, தக்காளி ரகங்கள் அதிக ஈரப்பதம் உள்ள நிலத்தில் பட்டால் அழுகி விடும்; இதை தவிர்க்க, ஆப்பிள் தக்காளி செடிகள் நிலத்தில் படாமல் இருக்க, வயல் முழுவதும் சவுக்கு குச்சிகளை நட்டு, குச்சிகளுக்கு இடையே கம்பிகளை கட்டி விடுகின்றனர். கம்பிகள், வயலின் மேல் பகுதியில் வலை போல் காணப் படுகிறது. கம்பிகளில் இருந்து சணல் கயிறுகளால் செடிகளை கட்டி விடுகின்றனர். இக் கயிறுகள், செடிகள் நிலத்தில் படாமல், நேராக நிற்க உதவுகிறது.

இம்முறையில் தக்காளி செடிகளை பாதுகாப்பதால், மழை காலங்களில் செடி நிலத்தில் பட்டு பழங்கள் வீணாவது தடுக் கப்படுகிறது. ஒவ்வொரு செடிக்கும் சொட்டு நீர் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்சுகின்றனர். இதனால் குறைவான தண்ணீர் இருந்தால் போதுமானது. இச்செடிகளை மற்ற ரகங்களை போல் மிகவும் அடர்த்தியாக நடாமல், அதிக இடைவெளியில் நட்டால் போதுமானது. இதனால் விதை, நாற்று நடுதல் போன்றவற்றுக்கு ஏற்படும் செலவு குறைகிறது.

இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது: நாட்டு ரகங்களை பயிர் செய்து ஆண்டுதோறும் நஷ்டம் அடைந் தோம். விலை அதிகம் இருக்கும் போது காய்கள் அழுகி விடும்; சீசன் காலங்களில் அதிகமான விளைச்சல் காரணமாக விலை இருக்காது. இதை தவிர்க்கவே புதிய ரகத்தை பயிர் செய் கிறோம்; முதல் வருடம் சாகுபடி செய்யும் போது மட்டும் சவுக்கு குச்சி, கம்பி, சணல் கயிறு, சொட்டு நீர் பாசனம் போன்றவற் றுக்கு, 60 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஒரு முறை செலவு செய்தால், இரண்டாம் போகத் தில் இருந்து செலவு செய்ய வேண்டியதில்லை, என்றனர்.

தற்போது, ஐந்து கிலோ தக்காளி கூடை 75 ரூபாய்க்கும், ஆப்பிள் தக்காளி 90 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. சாதாரண ரகங்கள் சில்லரை விலையில் கிலோ 18 ரூபாய்க்கும், ஆப்பிள் ரகம் 20 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் உணவு பதப்படுத்துதல் துறையில் அன்னிய நேரடி முதலீடு அதிகரிக்கும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
இந்தியாவில் உணவு பதப்படுத்துதல் துறைக்கு வளமான வர்த்தக வாய்ப்பு உருவாகி வருகிறது. நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் இத்துறையில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களில் அன்னிய நேரடி முதலீடு 27 சதவீதம் உயர்ந்து ரூ.1,200 கோடியாக அதிகரிக்கும் என்று மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சுபோத்காந்த் சகாய் தெரிவித்தார்.

ஆர்வம்

குறிப்பாக, மொரீசியஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன என்று இந்த துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்தியாவில், இத்துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டிற்கு அனுமதி உள்ளது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், இத்துறையில் வெளிநாட்டு நிறுவனங்கள் ரூ.400 கோடி மதிப்பிற்கு முதலீடு செய்து இருந்தன. இது, சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் 200 சதவீதம் அதிகரித்து ரூ.945 கோடியாக வளர்ச்சி அடைந்துள்ளது.

குளிர் பானங்கள்

குளிர் பானங்கள், உணவு பொருள்கள், ஸ்நாக்ஸ் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் பெப்ஸிகோ நிறுவனம் இந்தியாவில் உணவு பதப்படுத்துதல் துறையில் அதிக முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. சென்ற நிதி ஆண்டில், இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட அன்னிய நேரடி முதலீட்டில், இந்நிறுவனத்தின் பங்களிப்பு மட்டும் 40 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.
உலக அளவில் ஏற்பட்ட கடும் பொருளாதார பின்னடைவிலிருந்து, அதிவேகமாக மீண்டு, வளர்ச்சிப் பாதைக்கு திரும்பி உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இதனால், நாட்டின் உணவு பதப்படுத்துதல் துறையும் வியக்கத்தக்க வகையில் வளர்ச்சி அடைந்து வருகிறது. அதேசமயம், இத்துறையில் போதுமான அளவிற்கு அடிப்படை கட்டமைப்பு வசதி இல்லை. எனவே, ஊரக பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, பொது – தனியார் கூட்டுத் திட்டத்தில் ‘மெகா’ உணவு பூங்காக்களை அமைக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12) 30 மெகா உணவு பூங்காக்களை அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதில், தற்போது 10 உணவு பூங்காக்களுக்கு அனுமதி அளித்துள்ளது. எஞ்சியுள்ள 20 உணவு பூங்காக்களுக்கு அனுமதி பெறுவதற்கான கோரிக்கை மனு, அமைச்சரவை குழுவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு ‘மெகா’ உணவு பூங்காவையும் உருவாக்க ஆகும் மொத்த செலவு ரூ.300 கோடி ஆகும். இதில், ரூ.50 கோடி நிதி மத்திய அரசால் வழங்கப்படும்.

வேலைவாய்ப்பு

அன்னிய நேரடி முதலீட்டால், நாட்டின் பொருளாதார வளம் மேம்படுகிறது. வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில் நுணுக்கங்களை தெரிந்து கொள்ள முடியும். மேலும், நவீன தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ள முடியும். தொழில் துறை உற்பத்தி மேம்பட்டு, வேலைவாய்ப்பு அதிகரிக்கும். உள்நாட்டில் டாலர் புழக்கம்

அதிகரித்து, அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு அதிகரிக்கும்.
உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார உருக்குலைவால், சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவில் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட அன்னிய நேரடி முதலீடு, ஒட்டுமொத்தத்தில் 5.4 சதவீதம் குறைந்து 2,730 கோடி டாலரிலிருந்து 2,589 கோடி டாலராக சரிவடைந்துள்ளது. அதேசமயம், இதே நிதி ஆண்டில், உணவு பதப்படுத்துதல் துறையில் அன்னிய நேரடி முதலீடு 200 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்தியாவில், இத்துறை எதிர்காலத்தில் அதிவேகமாக வளர்ச்சி அடையும் என்பதால்தான் அன்னிய நிறுவனங்களின் முதலீடு அதிகரித்து வருகிறது.
மொத்த முதலீடு
நடப்பு ஆண்டு மார்ச் மாதத்திலும் அனைத்து துறைகளில் மொத்த அன்னிய நேரடி முதலீடு, சென்ற ஆண்டின் மார்ச் மாதத்தைக் காட்டிலும் 38 சதவீதம் சரிவடைந்து 195 கோடி டாலரிலிருந்து 121 கோடி டாலராக குறைந்துள்ளது.
இந்நிலையில், இந்திய பொருளாதாரம் தற்சார்புடையதாக இருப்பதாலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஏற்றுமதியின் அளவு 16–18 சதவீதம் என்ற அளவில் குறைவாக இருப்பதாலும், நடப்பு நிதி ஆண்டில், ஒட்டுமொத்தத்தில் அன்னிய நேரடி முதலீடு அதிகரிக்கும் என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## இயற்கை ரப்பர் விலை தொடர்ந்து அதிகரிப்பு டயர் விலை மேலும் உயரும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
இயற்கை ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், வாகன டயர்கள் விலையை 25 சதவீதம் உயர்த்த வேண்டிய நிலைக்கு நிறுவனங்கள் தள்ளப்பட்டுள்ளன. பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகும் ரப்பர் விலை கட்டுப்படுத்தப்படாததால், டயர்கள் விலையை மேலும் உயர்த்தும் முடிவுக்கு வந்துள்ளதாக மோட்டார் வாகன டயர் தயாரிப்பாளர்கள் சங்கம் (அட்மா) தெரிவித்துள்ளது.
கோரிக்கை
ஏற்கனவே மோட்டார் வாகன டயர்கள், சைக்கிள் மற்றும் ரிக்ஷா டயர்கள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. விரிவாக்க நடவடிக்கைகளில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொண்டு இத்துறை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், விலையை 20–25 சதவீதம் உயர்த்துவதை தவிர வேறு வழியில்லை என அட்மா அமைப்பின் தலைவர் நீரஜ் கன்வார் தெரிவித்தார்.
அதே சமயம் மூலப்பொருள்கள் விலை உயர்வை தடுக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். இதன் ஓர் அங்கமாக, இயற்கை ரப்பர் இறக்குமதி மீதான 20 சதவீத வரியை ரத்து செய்ய வேண்டும், முன்பேர சந்தைகளில் இதன் மீதான வர்த்தகத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகள் மத்திய அரசிடம் வைக்கப்பட்டுள்ளன.
விலை நிர்ணயம்
இயற்கை ரப்பர் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதற்கான காரணங்களும் ஆராயப்பட்டு வருகின்றன. கேரள மாநிலத்தில் 300 பெரிய ரப்பர் தோட்டங்களின்

உரிமையாளர்கள் ஒரு குழு அமைத்துக் கொண்டு இயற்கை ரப்பர் விலையை நிர்ணயம் செய்து வருகின்றனர். அவர்கள், உற்பத்திச் செலவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான விலையில் இயற்கை ரப்பரை விற்பனை செய்து வருவதாக தெரிகிறது. இந்நிலையில், நடப்பாண்டில், 1.75 லட்சம் டன் இயற்கை ரப்பருக்கு பற்றாக்குறை ஏற்படும் என கன்வார் தெரிவித்தார்.
இதனால் சைக்கிள் மற்றும் ரிக்ஷா டயர்களை தயாரிக்கும் நிறுவனங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் வாகன டயர்கள் தயாரிப்பு துறையின் சந்தை மதிப்பு ரூ.22,000 கோடியாக உள்ளது. இதில் சைக்கிள் மற்றும் ரிக்ஷா டயர்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் பங்களிப்பு 17 சதவீதமாகும்.
அப்பல்லோ டயர்ஸ்
அப்பல்லோ டயர்ஸ் நிறுவனம், அண்மையில் அதன் பல்வேறு டயர்களின் விலையை உயர்த்தியது. வரும் ஜூன் மாதத்தில் மேலும் விலையை உயர்த்த தயாராகியுள்ளது. விலை உயர்வு 3.5 சதவீத அளவிற்கு இருக்கும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அப்பல்லோ டயர்சின் பேரம்பரா (கேரளா) ஆலையில், தொழிலாளர்கள் போராட்டத்தால் உற்பத்தி மந்தமடைந்துள்ளது. இதனால், டயர் தயாரிப்பு நாள் ஒன்றுக்கு 300 டன் என்ற அளவிலிருந்து 100 டன்னாக குறைந்துள்ளது. இது, 65 சதவீத சரிவாகும். விரைவில் தொழிலாளர்களுடன் உடன்பாடு ஏற்படும் என இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நீலகிரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் முயல்,கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி அறிவிப்பு

சென்னை, மே.6–
நீலகிரி மாவட்டத்தில் முயல் பண்ணை, கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு ஆகியவை மகளிர் சுய உதவி குழுக்களை கொண்டும், பழங்குடியின மகளிரைக் கொண்டும் நடத்தப்படும் என்று அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி அறிவித்துள்ளார்.
சினை பிடிக்காத மாடுகள்
சட்டசபையில் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையில் நடந்த விவாதத்துக்கு பதிலளித்து பேசியபோது அந்தத் துறையின் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:–
★ துறையின் மின் ஆளுமைக்காக வலைத் தளம் ஏற்படுத்தப்படும்.
★ நீலகிரி மாவட்டத்தில் முயல் பண்ணை, கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு ஆகியவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டும், பழங்குடியின மகளிரைக் கொண்டும் நடத்த வகை செய்யப்படும்.
★ சினைப் பருவத்துக்கு வராத கறவை மாடுகளுக்கு மலிவு விலையில் ‘பிரோஜெஸ்டிரோன்’ உறிஞ்சிகள் தயார் செய்யப்படும்.
★ 30 சதவீதம் மாடுகள் சினை பிடிக்காமல் உள்ளன. எனவே முதற்கட்டமாக 2 லட்சம் மாடுகளை சினை பிடிக்கச் செய்வதற்காக தலா ரூ.1,250 வீதம் செலவிடப்படும்.
100 கிளை நிலையங்கள்

★ மீன் உற்பத்தி பொருட்களுக்கான தரமான கண்காணிப்பு சான்றளிப்பு மையம் அமைக்கப்படும்.
★ ரூ.1.50 கோடி செலவில் (கட்டிடச் செலவை சேர்க்காமல்) 100 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் தொடங்கப்படும். உள்ளாட்சி அமைப்புகள் மூலமும், எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதியுதவியுடனும் இவற்றுக்கான கட்டிடங்கள் கட்டப்படும்.
★ 200 கால்நடை கிளை நிலையங்கள் நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்.
★ இளநிலை கால்நடை உதவி மருத்துவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளார் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி அமர்த்தப்படுவர்.
★ கால்நடை ஆய்வாளர் (1–ம் நிலை) வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர் சந்தை; மீன்பிடி துறைமுகம்: மீன்பிடி தடை கால நிவாரணத்தொகை ரூ.800 ஆக உயர்வு அமைச்சர் கே.பி.பி.சாமி தகவல்

சென்னை, மே.6–
மீன் பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட காலங்களில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.500–ல் இருந்து ரூ.800–ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று மீன்வளத் துறை அமைச்சர் கே.பி.பி.சாமி அறிவித்துள்ளார்.
மீன்பிடி துறைமுகம்
சட்டசபையில் மீன்வளத் துறை மானியக் கோரிக்கையில் எம்.எல்.ஏ.க்கள் செய்த விவாதத்துக்கு பதிலளித்து பேசிய போது, அந்தத் துறையின் அமைச்சர் கே.பி.பி.சாமி வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:–
★ மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.500–ல் இருந்து ரூ.800–ஆக உயர்த்து வழங்கப்படும்.
★ கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மீன்பிடிப்பு இல்லாத 3 மாதங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, கடந்த ஆண்டைப் போலவே ரூ.1,800 ரொக்கத் தொகை இந்த ஆண்டும் வழங்கப்படும்.
★ மீனவ மக்களுக்காக ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தொகுதிக்கு உட்பட்ட மூக்கையூர் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
கூடுதல் டீசல்
★ பாரம்பரிய மீன்பிடி கலன்களில் உள்ளேயும், வெளியேயும் பொருத்தப்படும் எந்திரங்களுக்கு 50 சதவீத மானியம் தரப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கையை 3 ஆயிரமாக உயர்த்தி, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் 5 பயனாளிகளுக்கு இதுபோன்ற எந்திரங்களை வழங்க ரூ.9 கோடி செலவிடப்படும்.
★ பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு வழங்கப்படும் டீசல் (விற்பனை வரி நீக்கப்பட்டது) மாதம் ஒன்றுக்கு 250 லிட்டரில் இருந்து 300 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

ஆற்று முகத்துவாரம்

★ ஆற்றுமுகத் துவாரத்தில் மண் திட்டுகள் படிவதால் அங்கிருந்து கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல முடியவில்லை. எனவே அங்கு தூர்வாருவதற்கு இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய் அளவுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

★ கடலூர் மாவட்டம் வெள்ளார் ஆற்று முகத்துவாரம், பில்லமேடு ஆற்று முகத்துவாரம், பிச்சாவரம் செல்லும் கால்வாய் சின்ன வாய்க்கால் ஆற்று முகத்துவாரம் மற்றும் கால்வாய்கள் ரூ.29 லட்சம் செலவில் தூர்வாரப்படும்.

★ மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் உள்ள மீனவர் குடியிருப்புகள் அனைத்தும் ரூ.19 லட்சம் செலவில் இந்த ஆண்டில் மறுசீரமைக்கப்படும்.

மீனவர் தொகை கணக்கெடுப்பு

★ திருவள்ளூர் மாவட்டம் மீன்துறை ஆய்வாளர் அலுவலகக் கட்டிடம் ரூ.4.50 லட்சம் செலவில் பழுது பார்க்கப்படும்.

★ மீன்துறை தலைமை அலுவலகத்தின் அனைத்து நிர்வாகப் பிரிவையும் கம்ப்யூட்டர் மயமாக்கி, அகண்ட அலைவரிசையில் இணைக்க ரூ.25.50 லட்சம் செலவிடப்படும்.

★ சுனாமிக்குப் பிறகு பல நலத் திட்டங்களை வழங்குவதற்காக மீனவ மக்கள் தொகை, படகுகள், வலைகள் கணக்கெடுப்பு அவசியமாகிவிட்டது. எனவே இதற்கான பணிகள் ரூ.21 லட்சம் செலவில், மீன்துறை சார் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

★ 1907–ம் ஆண்டு தொடங்கப்பட்ட மீன்துறையின் 100 ஆண்டு கால செயல்பாடு பற்றி ரூ.11 லட்சம் செலவில் ஆவணப்படம் தயாரிக்கப்படும்.

மீனவர் சந்தை

★ மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம் மேம்படுத்தப்படும்.

★ மன்னார் வளைகுடா பகுதியில் இடைத் தரகர்கள் தலையீடு இல்லாமல் மீன்களை சுகாதாரமாக விற்பதற்காக இருப்பதற்காக ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர் சந்தை ஒன்று அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வேளாண்மை செய்திகள்

# அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பது நல்லது

## விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

இந்தியாவின் முக்கியமான எண்ணெய் வித்து பயிர்களின் முக்கியமான பயிர் எள் ஆகும். சீனா, ஆலந்து, அமெரிக்கா, ஜெர்மனி, துருக்கி, நெதர்லாந்து, ஆங்காங், இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு இந்தியா எள்ளை ஏற்றுமதி செய்கிறது. உலகில் இந்தியா மற்றும் சீனா எள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன.

### எள் உற்பத்தி

இந்தியாவில் ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், ஆந்திரபிரதேசம், மேற்கு வங்காளம், மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மொத்த எள் உற்பத்தி பரப்பில் 72 சதவீதமும், மொத்த உற்பத்தியில் 58 சதவீதமும் பங்கு வகிக்கின்றன. கடந்த ஆண்டு 5.8 லட்சம் டன்களாக இருந்த எள் உற்பத்தி இந்த ஆண்டு (2009-10) 7.6 லட்சம் டன்களாக உயரும் என கணக்கிடப்பட்டு உள்ளது.

எள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலமாக குஜராத்தில் இந்த ஆண்டு எள் உற்பத்தி 1.4 லட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான முக்கிய காரணம் கடந்த ஆண்டு சர்வதேச சந்தையில் எள்ளுக்கான தேவை அதிகரித்ததே ஆகும். ஆனால் உணவு எண்ணெய் ஏற்றுமதி வருகிற செப்டம்பர் மாதம் வரை தடை செய்யப்பட்டு உள்ளது. இந்த தடை காரணமாக எள்ளின் விலை குறைந்த அளவு மட்டுமே பாதிக்கப்படும். இந்தியாவின் எள் ஏற்றுமதி சீனாவின் உற்பத்தியை பொறுத்தே அமையும். இந்த ஆண்டு சீனா மற்றும் ஆப்பிரிக்காவில் எள் உற்பத்தி நன்றாக உள்ளது என சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே இந்தியா சுமார் 1.5 முதல் 2.3 லட்சம் டன்கள் வரை எந்திரத்தின் மூலம் தோல் நீக்கப்பட்ட எள் மற்றும் இயற்கை வெள்ளை எள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு இருப்பதாக சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

### மானாவாரி எள்

தமிழகத்தை பொறுத்தவரை எள் சுமார் 65 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது. எள் சாகுபடி பரப்பளவானது கடந்த 2001-02-ம் ஆண்டில் 84 லட்சம் ஹெக்டேராக இருந்தது. எள் உற்பத்தி திறன்கடந்த 2000-01-ல் ஹெக்டேருக்கு 548 கிலோவாக இருந்தது. தற்போது ஹெக்டேருக்கு 469 கிலோவாக குறைந்து உள்ளது.

மாசிப்பட்டம் என்று அழைக்கப்படும் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் பயிரிடப்பட்ட இறவை எள் தற்போது சந்தைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதன் வரத்து ஏப்ரல் மற்றும் ஜூன் மாதம் வரை இருக்கும். மேலும் சந்தைக்கு வரும் எள்ளின் தரம் மானாவாரி எள்ளின் தரத்தைவிட நன்றாக இருக்கும். மொத்த வரத்தில் 75 சதவீதம் சிவப்பு எள்ளாகும். மீதம் உள்ள வெள்ளை எள் ஏற்றுமதி மற்றும் பேக்கரி தயாரிப்பு பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் ஆலையாளர்கள் ஜூலை முதல் செப்டம்பர் வரை கர்நாடக மாநிலத்தில் இருந்தும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் குஜராத் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் இருந்தும், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஆந்திரா மற்றும் ஒரிசா மாநிலங்களில் இருந்தும் கொள்முதல் செய்கின்றனர். மற்ற மாநில எள்ளை காட்டிலும் தமிழ்நாட்டில் விளையும் எள்ளின் தரம் நன்றாக இருப்பதால் மற்ற மாநிலங்களில் இருந்து வாங்கப்படும் எள்ளோடு கலந்து எண்ணெய் எடுக்கிறார்கள்.

### ஒழுங்குமுறை விற்பனை கூடம்

எள் பயிரிடும் விவசாயிகள் விற்பனை முடிவை எடுக்க ஏதுவாக கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் ஏற்றுமதி சந்தை தகவல் ஆய்வு மையம் சிவகிரி சந்தையில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய சந்தை தகவல்களை ஆராய்ந்தது. இதன் மூலம் நல்லெண்ணைக்கான தேவை மற்ற மாநிலங்களில் உள்ள எள் பயிர்களின் நிலைமை அவற்றின் மூலம் பெறப்படும் தொடர் வரத்து மற்றும் ஆராய்ச்சி முடிவுகளின் படி இந்த மாதம் முதல் வருகிற ஆகஸ்டு மாதம் முடிய சிவப்பு எள்ளின் விலை தமிழ்நாட்டில் கிலோ ஒன்றுக்கு ரூ.41 முதல் ரூ.43 வரை இருக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது.

மேலும் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விலை ஏற வாய்ப்பு உள்ளது. இருப்பினும் எள் சேமிப்பை முறைப்படி செய்யாவிட்டால் எள்ளின் தரம் குறைந்து விடும்.

எனவே விவசாயிகள் அறுவடை செய்து தங்கள் வசம் வைத்திருக்கும் எள்ளை இருக்கும் நிலையிலேயே அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விற்றுபயன் அடையலாம் என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

# கிராம மகளிர் பொருளாதாரத்தை உயர்த்தும் காளான் பண்ணை

*தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தற்போது காளான் வளர்ப்பு நல்ல வேளாண் தொழில் வாய்ப்பாக இருக்கிறது. நகரங்களில் ஆங்காங்கே காளான் சூப் விற்பனை செழிப்பாக இருக்கிறது. கிராமப்புற மகளிர் சுய உதவிக்குழுக்கள் காளான் வளர்ப்பு மற்றும் விற்பனையை மேற்கொண்டால் நல்ல லாபம் பெறலாம். காளானை பொறுத்தமட்டில் சிப்பிக்காளான், முட்டைக்காளான், லெண்டிவகை காளான்கள் முதலிய ரகங்கள் உணவுக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் குறைந்த இடத்தில், சிறிய முதலீட்டில் ஆண்டு முழுவதும் வளர்க்க கூடிய ரகமாக சிப்பிக்காளான்கள் மட்டுமே உள்ளன. செயற்கை முறையில் சிப்பிக்காளான்களை குடில்கள் அமைத்து வளர்க்கலாம்.*

### சிப்பிக்காளான்

*சிப்பிக்காளானை வளர்க்க முதலில் காளான் வீடுகள் அமைக்கப்பட வேண்டும். ஒரு நாளைக்கு சுமார் 10 கிலோ காளான் விளைவிக்கப்பட வேண்டுமென்றால் அமைக்கப்படும் குடிலானது 200 முதல் 250 சதுர அடி இருக்க வேண்டும். இந்த வகை வீடுகள் ஓடு, கான்கிரீட் அல்லது ஓலைக்குடிலாக இருக்கலாம். இவற்றில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்து பின்பு வீட்டின் தளத்தை மணல் கொண்டு 1 அடி வரை பரப்ப வேண்டும். குடிலின் சுற்று சுவர்களில் சாக்குப் படுதாக்களை கட்டி தொங்க விட வேண்டும். காளான் படுக்கைகள் வைப்பதற்கு ஏற்றாற் போல் மர அடுக்குகளை வீட்டினுள் அமைத்துக் கொள்ள வேண்டும். வீட்டின் எதிர் எதிர் திசைகளில் இரண்டு சன்னல்கள் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலும் காளான் வீடுகள் வடக்கு தெற்கு பக்கம் ஓடியவையாக இருப்பது நல்லது.*

*நாள் ஒன்றுக்கு 10 கிலோ காளான் வளர்க்க 20 படுக்கைகள், 10 பாட்டில் காளான் விதைகள், 10 கிலோ வைக்கோல் தேவைப்படும். காளான் விதைகளை, காய்ந்த நெல், கோதுமை வைக்கோல், கரும்பு சக்கை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பாக்கெட்டுகளில் நிரப்பி அதில் காளான் விதைகளை போட்டு வளர்க்கலாம் என்றாலும், நெல் வைக்கோலில் தான் காளானின் விளை திறன் அதிகம்.*

### காளான் படுக்கை

*காளான் படுக்கைகள் தயாரிக்க நன்றாக காய்ந்த சமீபத்தில் அறுவடை செய்யப்பட்ட வைக்கோலை பொடி பொடி துண்டுகளாக 5 முதல் 10 சென்டிமீட்டர் அளவு இருக்கும் படி வெட்டிக் கொள்ள வேண்டும். இப்படி வெட்டப்பட்ட துண்டுகளை தண்ணீரில் சுமார் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு ஊறிய வைக்கோலை எடுத்து அண்டாவில் இட்டு சுமார் அரை மணி நேரம் வேக வைக்க வேண்டும். பின்பு, தண்ணீரை வடித்து விட்டு கிருமிநாசினி கொண்டு துடைக்கப்பட்ட சிமிண்டு தரையில் இந்த வைக்கோலை சீராக பரப்பி 50 சதவீதம் ஈரப்பதம் உலரும் வரை உலர்த்த வேண்டும்.*

*பின்னர் உலர்த்தப்பட்ட வைக்கோலை மெல்லிய பாலீத்தின் பைகளில் ஒரு அடுக்காக நிரப்ப வேண்டும். இதற்கடுத்து இந்த வைக்கோலின் மேல் இரண்டாம் அடுக்காக காளான் விதைகளை தூவ வேண்டும். அதன்பின் சிறிது வைக்கோலை நிரப்ப வேண்டும். அடுத்த காளான் விதைகளை நிரப்ப வேண்டும். இப்படி பை முழுவதும் நிரப்பிய பின் பையின் வாய் பகுதியை தைத்து விட வேண்டும். இந்த முறைக்கு காளான் இடுதல் என்று பெயர். விதையிட்ட காளான் படுக்கைகளை காளான் வீட்டினுள் உள்ள மர அடுக்குகளில் அடுக்கி வைத்து பராமரிக்க வேண்டும்.*

*இந்த நிலையில் காளான் விதைகள் முளைத்து வெண்மை திற மைசிலியங்களை உருவாக்கி பை முழுவதும் பரவத் தொடங்கும். இந்த நிலைக்கு பூசணம் பரவும் நிலை என்று பெயர். காளான் வீட்டின் வெப்பநிலை மற்றும் காற்றின் ஈரப்பதத்தை தக்க வைக்க, குடிலின் உள்ளே கட்டித் தொங்க விடப்பட்டுள்ள சாக்கு பைகளின் மீதும், மணல் பரப்பின் மீதும் ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முறையாவது நீர் தெளிக்க வேண்டும். இப்படி பராமரிக்கும் போது 5,6 நாட்கள் இடைவெளியில் காளான்கள் தோன்றும். இப்படியாக ஒரு படுக்கையிலிருந்து மூன்று முறை காளான்கள் அறுவடை செய்ய முடியும்.*

### விளைதிறனை அதிகப்படுத்தும் முறைகள்

*வைக்கோலில் காளானை விளைவிக்கும் போது, வைக்கோலுடன் காணப்பயறு பொடி, துவரைப்பொடி, யூரியா, தேங்காய் தண்ணீர், சாணஎரிவாயு கலன்களிலிருந்து எடுக்கப்பட்ட கரைசல் போன்ற பொருட்களை சேர்த்து பின் காளான் விதையிடும் போது வைக்கோலில் காளான் விளைதிறன் சுமார் 20 முதல் 40 சதம் உயருகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.*

*காளான்களை அதிகாலையில் அறுவடை செய்ய வேண்டும். பறித்த காளான்களின் வேர்ப்பகுதியை நறுக்கி எரித்து விட வேண்டும். மண், தூசி போன்றவைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இளம் காளான் மொட்டுக்களுக்கும், காளான் பைகளுக்கும் சேதம் ஏற்படாமல் அறுவடை செய்ய வேண்டும்.*

### காளான் பதப்படுத்துதல்

*காளான்கள் பறித்த உடன் அழுகிவிடும். எனவே காளான்களை பறித்தவுடன் தண்ணீரில் கழுவாமல் பாலித்தீன் பைகளில் நிரப்பி வாய்ப்பகுதியை ஒட்டி விடவும். பின் பைகளின் மற்ற பரப்பில் காற்றோட்டத்திற்காக பென்சில் அல்லது பேனா கொண்டு சுமார் 10 முதல் 15 துளையிடவும். பின்பு இந்த பைகளை ஈரத்துணியில் சுற்றி குளிர்ந்த இடத்தில் வைப்பதன் மூலம் காளான்களை 24 மணி நேரத்திற்கு கெடாமல் பாதுகாக்கலாம். குளிர்சாதன பெட்டியில் 5 முதல் 10டிகிரி செண்டிகிரேட் வெப்பத்தில் வைப்பதன் மூலம் 2, 3 நாட்கள் வரை கெடாமல் பாதுகாக்கலாம். காளான் பைகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்து செல்ல பனிக்கட்டி நிரம்பிய பெட்டிக்குள் நிரப்பி எடுத்து செல்லலாம்.*

*காளான்களை நீண்ட நாளைக்கு கெடாமல் வைக்க காளான்களை வேருடன் அறுவடை செய்து வேர்ப்பாகத்தையும் மற்றும் அதில் ஒட்டியுள்ள மண், தூசிகளை நீக்கி நீள்வாக்கில் இரண்டாக வெட்டி நறுக்கிய துண்டுகளை மெல்லிய சுத்தமான வெள்ளைத்துணியில் கட்டிக் கொதிக்கும் நீரில் சுமார் 2 நிமிடம் மூழ்கியிருக்கும் படி வைக்க வேண்டும்.*

*பின்பு நீரை வடித்து விட்டு காளான்களை புதிய டப்பாக்களில் நிரப்ப வேண்டும். தண்ணீரில் 2 சதவீதம் சமையல் உப்பை கலந்து கொதிக்க வைத்து வடிகட்டி எடுத்து தேவையான அளவு உப்புகரைசலை காளான் நிரப்பப்பட்ட டப்பாக்களில் கொதிநீர் அல்லது நீராவியில் குறைந்தது 15 நிமிடங்களாவது வைக்க வேண்டும். இதனால் டின்களில் உள்ள காற்று வெளியேற்றப்பட்டு விடும். மூடிகளை சீல் செய்து பிரஷர் குக்கரில் 20 நிமிடங்களில் 20 நிமிடங்களில் வைத்து பின் குளிர்ந்த நீரில் வைத்து எடுக்க வேண்டும். பிறகு விற்பனைக்கு அனுப்பலாம்.*

*தகவல்: முனைவர். ராஜேந்திரன். போன்: 94439 98480*

*காளான் விதை தயாரிப்பு மற்றும் பதப்படுத்துதல் குறித்த ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளலாம்.*

ஊட்டி புனித ஜோசப் கல்லூரியில் இன்று

# மாணவர்களுக்கு கலெக்டர் பட்டமளிக்கிறார்

ஊட்டி, மே.6–

நீலகிரி மறை மாவட்டம் சார்பில் ஊட்டியில் புனித ஜோசப் கல்வியியல் கல்லூரி தொடங்கப்பட்டு உள்ளது. இந்த கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை நோயல் ஸ்டீபன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்ட மறை மாவட்டம் சார்பில் 1820–ம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் கல்வி பணிகள் தொடங்கப்பட்டன. மாவட்டம் முழுவதும் 17 கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்ட மக்கள் கல்வி பெறவும், முக்கியமாக பெண்கள் முன்னேற்றம் அடையவும் இவை தொடங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் பட்டதாரி மாணவ–மாணவிகளுக்கு புனித ஜோசப் கல்வியியல் கல்லூரி மூலம் பி.எட். கல்வி அளிக்கப்படுகிறது.

இந்த கல்லூரியின் இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நீலகிரி மறை மாவட்ட பிஷப் டாக்டர் அமல்ராஜ் தலைமையில் இன்று (வியாழக்கிழமை) மாலை 3 மணிக்கு வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ–மாணவிகளுக்கு பி.எட். பட்டம் வழங்கி பேசுகிறார். 7–ந் தேதி கல்லூரி ஆண்டு விழா மாலை 3 மணிக்கு நடைபெறுகிறது. இந்த விழாவில் பாரதியார் பல்கலைக்கழக கல்வி பிரிவின் பேராசிரியர் டாக்டர் அருள்சாமி கலந்து கொள்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

காய்கறி கண்காட்சி போட்டியில்

# விவசாயிகள் கலந்து கொள்ள அழைப்பு

கோத்தகிரி, மே.6–

கோத்தகிரி காமராஜ் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள நேரு பூங்காவில் வருகிற 29 மற்றும் 30–ந் தேதிகளில் 3–வது காய்கறி கண்காட்சி நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் வீட்டு காய்கறி தோட்டம் அமைத்துள்ள விவசாயிகளை ஊக்குவித்து பரிசுகள் வழங்க உள்ளதால், வீட்டு காய்கறி தோட்டம் அமைத்துள்ள விவசாயிகள் போட்டியில் கலந்து கொள்ளலாம். இதற்கான விண்ணப்பங்களை கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பெற்று கொண்டு வருகிற 14–ந் தேதிக்குள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

மேற்கண்ட தகவலை கோத்தகிரி தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணி தெரிவித்துள்ளார்.